# ஆயர் மடல் ...

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே நம்முடைய அருமை இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் யாவரையும் வாழ்த்துகிறேன்.

27-1-2017 அன்று நம்முடைய குடும்ப இன்ப சுற்றுலாவில் கிறிஸ்துவின் அன்பினால் மேலான ஐக்கியத்தோடு, மகிழ்வோடு பங்கெடுத்துக் கொண்டதற்காகவும் தேவன் தந்த மேலான பாதுகாவலுக்காகவும் ஆண்டவரை ஸ்தோத்தரிக்கிறேன். இதனை சிறப்பாக ஒழுங்கு செய்த செயற்குழு அங்கத்தினர்கள், சபை மக்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன்.

24-2-2017 அன்று ஆண்கள் ஐக்கிய சிறப்பு ஆராதனையாக நடத்த திட்டமிட்டிருக்கிறோம், இதில் நம் திருச்சபையின் ஆண்கள் அனைவரும் அதற்கான சிறப்பு பாடல் பயிற்சி மற்றும் ஆராதனைகளில் உற்சாகமாக பங்கெடுத்துக் கொள்ளவும், அதன்மூலம் திருச்சபையின் ஆண்கள் ஐக்கிய சங்கம் புத்துணர்வோடு மேலும் ஊழியத்தில் சிறப்புடன் செயலாற்ற ஜெபத்துடன் பிரயாசமெடுப்போம்.

நமது திருச்சபையின் சார்பாக திருமறைத் தேர்வு வரும் 7-4-2017 அன்று நடத்த திட்டமிட்டிருக்கிறோம் சிறுவர் முதல் பெரியவர்கள் வரையிலும் அனைவரும் பங்கெடுத்துக் கொள்ளலாம்,தேர்வில் பங்குபெறுவோர் தயவுகூர்ந்து உங்கள் பெயர்களை திருச்சபை உபதலைவர் திரு.ராஜவேல் அவர்களிடத்தில் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

நமது திருச்சபையின் பிள்ளைகள் ஆராதனைகளில் தொடர்ந்து இசைக்கருவி வாசிக்க வாய்ப்பளிக்கப்பட இருக்கிறது பெற்றோர் உங்கள் பிள்ளைகளை இதற்கென்று உற்சாகப்படுத்த கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்ந்து கர்த்தருக்கென்று நம் திறமைகளை அர்ப்பணித்து, கர்த்தர் நம் வாழ்வின் ஒவ்வொரு நாளும் பணிகளில், குடும்பத்தில், ஊழியத்தில், தரும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**கிறிஸ்துவின் பணியில்**
**அருள்திரு.சே.டேவிட்சன் பால் ஜேக்கப**

.

தியானம்

## இரண்டாம் வருகையும், நியாயத்தீர்ப்பும் :

"இரண்டாம் வருகை" - இந்த வார்த்தையானது பலதரப்பட்ட மக்களிடையே பல்வேறு விதமான உணர்வுகளை உண்டாக்குகிறது.

– இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவரை உண்மையும் உத்தமுமாய் பின்பற்றி வாழ்கிற ஒரு கூட்ட ஜனத்திற்கு அவரின் இரண்டாம் வருகை மகிழ்ச்சியை தருகிறது.

– அதேவேளையில் இயேசுவை ஏற்றுக்கொண்டும் அவரை உண்மையாய் பின்பற்ற மனதில்லாமல் தங்களுடைய ரகசிய பாவங்களோடு வாழ்கிற ஒரு கூட்ட ஜனத்திற்கு இரண்டாம் வருகை என்பது பயத்தையும் நடுக்கத்தையும் கொடுக்கிறது.

– இன்னும் ஒரு கூட்ட ஜனம் உண்டு. இவர்கள் இயேசுவை மறுதலிக்கிறவர்கள். தங்கள் சுய இச்சைகளின்படி நடக்கிறவர்கள். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையையும் நியாயத்தீர்ப்பையும் குறித்து தேவன் கொண்டுள்ள நீடிய பொறுமையையும் கிருபையையும் உணராமல் "அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே?" (2பேதுரு3:4) எனக் கூறும் பரியாசக்காரர்கள். தங்களுக்கு கேடுவரதக்கதாக வேத வாக்கியங்களை புரட்டுகிறவர்கள்.

அப்போஸ்தலனாகிய பவுலின் காலத்தில் பேலிக்ஸ் என்னும் ஒரு தேசாதிபதி இருந்தான். அவன் தனக்கும் தன் மனைவிக்கும் கிறிஸ்துவை பற்றும் விசுவாசத்தை குறித்து சொல்லுமாறு பவுலை அழைப்பிக்கின்றான். பவுல் நீதியையும் , இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத்தீர்ப்பையும் குறித்து பேசுகையில் , பேலிக்ஸ் பயமடைந்தவனாய், மேலும் கேட்க மனதில்லாமல் பவுலை அனுப்பிவிடுகிறான் (அப்போஸ்தலர் .24:24,25). இன்றைக்கும் கூட நம்மில் அநேகர் ஆசீர்வாதங்களையும் , வாக்குத்தத்தங்களையும் கூறும் உபதேசங்களையே அதிகம் கேட்க விரும்புகிறோம். நியாயத்தீர்ப்பை குறித்த உபதேசங்களையோ , பாவத்தை கண்டித்து உணர்த்தும் உபதேசங்களையோ நாம் விரும்புவதில்லை.

பாவமே ஆண்டவரின் நியாயத்தீர்ப்பை குறித்து பயத்தை உண்டாக்குகிறது. நியாயத்தீர்ப்பின் நாளிலே நாம் குற்றமற்றவர்களாய் விளங்க யோவான்.9:41 ம் வசனத்தின் மூலம் இயேசு கிறிஸ்து நமக்கு ஒரு வழியை காட்டுகிறார்.

"நீங்கள் குருடராயிருந்தால் உங்களுக்கு பாவமிராது" (யோவான் 9:41)

உதாரணங்கள்:

1. ஏவாள் - நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிப்புக்கு நல்லதும் , பார்வைக்கு இன்பமும் , இச்சிக்கப்படத்தக்கதுமாய் இருக்க கண்டு அதை பறித்து புசிக்கிறாள் (ஆதியாகமம் 3:6). அன்றைக்கு ஏவாளின் கண்கள் குருடாய் இருந்திருக்குமானால் பாவமும், பாவத்தின் சம்பளமாகிய மரணமும் இவ்வுலகத்தில் பிரவேசித்திருக்காது.

2. கிதியோன் - பராக்கிரமசாலியாகிய கிதியோன் , மீதியானியருடனான போரில் வெற்றி பெற்ற பின்பு , அவனுடைய கண்கள் இஸ்மவேலரிடத்தில் இருந்த பொன் கடுக்கண்கள் மேல் சென்றது (நியாயாதிபதிகள் 8:24 - 27). அதன் விளைவாக இஸ்ரவேலரெல்லாரும் சோரம் போனார்கள். அது கிதியோனுக்கும் அவன் வீட்டாருக்கும் கண்ணியாயிற்று. அன்றைக்கு கிதியோனின் கண்கள் குருடாய் இருந்திருக்குமானால் எவ்வளவு நலமாயிருக்கும்?

3. தாவீது - உப்பரிகையில் உலாவிக்கொண்டிருந்த தாவீதின் கண்கள் அன்றைக்கு குருடாய் இருந்துருக்குமானால் பத்சேபாளிடம் பாவம் செய்யாமல் கர்த்தரின் தண்டனை தீர்ப்பிற்கு விலகி இருப்பான்.

4. லோத்து - தன் கண்களை ஏறெடுத்து பார்த்து , தன் பார்வைக்கு நலமானதை தெரிந்து கொண்டு சோதோமுக்கு நேரே கூடாரம் போட்டான் (ஆதியாகமம் 13: 10 -12). அன்றைக்கு லோத்துவின் கண்கள் குருடாய் இருந்திருக்குமானால் தேவன் அருவருக்கிற சந்ததிகளாகிய மோவாபியரும் அம்மோனியர்களும் உருவாகி இருக்கமாட்டார்கள். கர்த்தர் சோதோம் கொமோரா பட்டணங்களை அழிக்க தீர்மானித்திருந்தும் லோத்துவையும் , அவன் வீட்டாரையும் காக்க மனதுள்ளவராகி இரண்டு தூதர்களை அவனிடத்தில் அனுப்புகிறார்.

தூதர்கள் லோத்துவுக்கு கொடுத்த எச்சரிப்பின் வார்த்தைகள் மூலம் நாம் எவ்வாறு தேவனுடைய நியாயத்தீர்ப்பின் நாளுக்கு ஆயத்தப்பட வேண்டும் என்பதை அறியலாம்.

**i ) ஆயத்தப்படு, அழிவு நிச்சயம்**

லோத்து தன் கண்களால் இச்சித்த தேசம் அழிந்து போகிறபடியால் அதைவிட்டு வெளியேற ஆயத்தப்பட தூதர்கள் அறிவுறுத்துகின்றனர் (ஆதி 19: 12 -14). நாம் வாழ்கின்ற இந்த உலகமும் அழிந்து போவது நிச்சயம் ( 2 பேதுரு 3: 10). அதற்கு முன் நாம் கிறிஸ்துவின் வருகையில் எடுத்துக்கொள்ளப்படத்தக்கதாய் ஆயத்தப்பட வேண்டும்.

**ii ) தாமதம் செய்யாதே, துரிதமாய் போ**

அழியப்போகிற தேசத்திலே தாமதித்துக் கொண்டிருந்த லோத்துவை தூதர்கள் துரிதப்படுத்துகிறார்கள் (ஆதி 19 : 15 ,16). கிறிஸ்துவின் வருகையை நோக்கி இருக்கும் நாமும் துரிதமாய் செயல் பட வேண்டும்.

**iii ) திரும்பி பாராதே, தீமை பற்றி கொள்ளும்**

இந்த உலகம் அழிவிற்குரியது. தேவன் நியாயத்தீர்ப்பின் அழிவிலிருந்து நம்மை காக்க விரும்புகிறார். இன்னும் இந்த அழிந்து போகின்ற பொருள் மீது நமக்கு என்ன பார்வை ? நாம் விட்டு விட்டு வந்த பழைய பாவ வாழ்க்கையை உலக மேன்மைகளை பின்னிட்டு பார்த்து இச்சித்தோமானால் தீமை நம்மை பற்றி கொள்ளும்.

**iv ) சோர்ந்து போகாதே, சோரம் போவாய்**

தூதர்கள் லோத்துவை அந்த பட்டணத்திற்கு வெளியே கொண்டு வந்து விட்ட பிறகு கர்த்தர் லோத்துவை மலைக்கு ஓடிப்போக கட்டளையிடுகிறார். தம்முடைய தூதர்களை அனுப்பி இம்மட்டும் தன்னை அழைத்து வந்த கர்த்தரின் வழிநடத்துதலை உணராத லோத்துவோ சோர்ந்து போனவனாய் அருகில் உள்ள ஊருக்கு போகவே தன்னால் முடியும் என்கிறான். கர்த்தர் நம்மை பாவத்தில் இருந்து தூக்கி எடுக்கிறார். சாட்சி உள்ள வாழ்க்கை வாழ பெலப்படுத்துகிறார். நாமோ சோர்ந்து போனவ ர்களாய் மறுபடியும் இச்சைக்குள்ளானவர்களாகி சோரம் போகிறோம்.

"நீங்கள் காண்கிறோம் என்று சொல்லுகிறபடியினால் உங்கள் பாவம் நிலைநிற்கிறது"

**கருணைக் கண்கள் இல்லாத சீடர்கள்** :

யோவான் 9 ம் அதிகாரத்தை தியானிக்கையில் அங்கே இயேசு பிறவி குருடனாகிய ஒரு மனுஷனை காண்கிறார். அவனை குணமாக்க வேண்டுமென இயேசுவின் கண்கள் கருணையினால் நிறைகிறது. ஆனால் அவருடைய சீஷரின் கண்களிலோ அத்தகைய கருணை காணப்படவில்லை. "போதகரே இவனை குணமாக்கும்" என்று கேட்பதற்கு பதில் , இவன் குருடனாய் பிறந்தது யார் செய்த பாவம் (யோவான்.9:2) என அவனுடைய குறைக்குரிய காரணத்தை ஆராய்கிறார்கள். அன்றாட வாழ்வில் நாம் சந்திக்கும் பலர் பெலவீனங்களோடும் வியாதிகளோடும் போராடிக் கொண்டிருக்கின்றனர். நாம் அவர்களை கருணை உள்ளதோடு காண்கிறோமா? அவர்களுக்காக தேவனிடத்தில் விண்ணப்பம் செய்கிறோமா? அவ்வாறு இல்லையெனில் நமக்கு கண்கள் இருந்தும் என்ன பயன் ? தேவையுள்ள ஒருவனை கருணை கண்களோடு பாராமல், அவனின் குற்றங்களை மாத்திரமே காண்கிறபடியினால் நம் பாவம் நிலைநிற்கிறது.

**அற்புதரை தேடாத மக்களின் கண்கள்** :

இயேசு கிறிஸ்து அந்த பிறவி குருடனை குணமாக்குகிறார். பிறந்தது முதல் குருடனாய் இருந்த அவனை பார்வையுள்ளவனாக கண்ட ஜனங்கள் அவனுக்கு இந்த அற்புதத்தை செய்த கிறிஸ்துவை தேடவில்லை. மாறாக அவனை பரிசேயரிடத்திற்கு கொண்டுபோனார்கள் (யோவான் .9:13). அன்றைக்கு குருட்டாட்டம் பிடித்த சோதோமின் ஜனங்கள் தூதர்கள் தங்கி இருந் த லோத்துவின் வீடு வாசலை தேடி தேடி அலுத்துப்போனார்கள். இங்கே பரலோகத்தின் ஒரே வழியாகிய இயேசு இவ்வளவு பிரத்தியட்சமாய் வெளிப்பட்டும் அவரை தேடாதபடி ஜனங்கள் குருடர்களாய் இருந்தார்கள். நம்முடைய கண்கள் கர்த்தரை தேடுகிற கண்களாய் , அவரை மாத்திரமே நோக்கி பார்க்கிற கண்களாய் இருத்தல் வேண்டும்.

**நன்மையை காணாத பரிசேய கண்கள்** :

அந்த குருடன் பார்வையடைந்ததை யூதர்கள் நம்பாமல் மறுபடியுமாக அவனை நோக்கி " உனக்கு என்ன செய்தான் , உன் கண்களை எப்படி

திறந்தான்" என கேட்கிறார்கள். ஏசு செய்த நன்மையை காண்கிற கண்கள் இல்லை. மாறாக அவரையே பாவியாக காண்கிற கண்கள் அன்று யூதருக்கு இருந்தது ( யோவான் 9: 24). அநேக நேரங்களில் நாமும் கூட கர்த்தர் செய்த நன்மைகளை காணாமல் நமக்கு எல்லாம் தெரியும் என்ற எண்ணத்துடன் பிறரையே குற்றவாளிகளாக தீர்க்கிறோம்.

அன்று சோதோம் ஜனங்கள் தூதர்களை இழிவுபடுத்த தேடுகிறார்கள் (ஆதி.19:5). இங்கோ யூதர்கள் கிறிஸ்துவை தூஷிக்கும்படி மறுபடியும் அவனை அழைத்து தேவனை மாத்திரம் மகிமைப்படுத்த சொல்கிறார்கள். ஆனால் இயேசுவை ஒரு தீர்க்கதரிசியாய் அறிந்திருந்த அவனோ அவரை மறுதலிக்க மனமில் லாதவனாய் அவர் பாவியென்று தனக்கு தெரியாது என்றும் அவர் தேவனிடத்திலிருந்து வந்தவர் என்றும் அறிக்கையிடுகிறான் (யோவான் .9:25,33). கிறிஸ்துவையே அவ்வளவு எளிதாக பாவியாக தீர்த்த யூத ஜனங்களும் மூப்பர்களும் இதை கேட்டவுடனே "முழுவதும் பாவத்தில் பிறந்த நீ எங்களுக் கு போதிக்கிறாயோ " எனக்கூறி அவனை புறம்பே தள்ளிவிட்டார்கள். அன்று தூதர்கள் லோத்துவை காக்கும்படி அவனை உள் இழுத்து கொண்டார்கள் (ஆதி .19:10). இங்கே புறம்பே தள்ளிவிடப்பட்ட அவனை இயேசு கண்டு அவன் விசுவாசத்தை பலப்படுத்துகிறார் (யோவான்.9: 35 - 38)

இந்த பிறவி குருடனைப் போல நாமும் கிறிஸ்துவிற்காக வைராக்கியம் கொண்டிருக்கும் போது ஒரு சில பிரச்சனைகளை சந்திக்க நேரிடலாம். அது சுற்றியுள்ள ஜனங்களால் உண்டாகும் நெருக்கடியாகவோ (சோதோம் ஜனங்கள்/ வேதபாரகர்கள், யூத மூப்பர்கள்) அல்லது நம்முடைய சொந்த குடும்பத்தால் உண்டாகும் நெருக்கடியாகவோ (நோவாவின் குமாரத்திகள் / பிறவி குருடனின் பெற்றோர்) இருக்கலாம். ஆனால் இவை எல்லாவற்றிலுமிருந்து நம்மை மீட்டெடுத்து நம்மை பலப்படுத்தும்படி நம் இரட்சகர் வல்லமையுள்ளவராயிருக்கிறார்.

நம் கண்ணானது சரீரத்தின் விளக்காய் இருக்கிறது (மத்தேயு .6:22). எனவே தீமைக்கு நம் கண்களை அடைத்துக்கொண்டு குருடர்களை போலவும், தேவனை தேடவும் அவர் செய்த நன்மைகளை காணவும் கண்கள் திறக்கப்பட்டவர்களாயும் இருப்போம்.

இதோ சீக்கிரமாய் வருகிறேன் என்று சொன்னவர் ஏன் இன்னும் தாமதிக்கிறார்? ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி , நம் மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். எனவே நம்முடைய கர்த்தரின் நீடிய பொறுமையை இரட்சிப்பென்று எண்ணுவோம். ஆயினும் கர்த்தரின் நாள் இரவிலே திருடன் வருகிற விதமாய் வரும். அவருடைய இரண்டாம் வருகையை எதிர்பார்த்திருக்கும் நாம் கறையற்ற வர்களும் பிழை இல்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையுள்ளவர்களாய் இருப்போம் ( 2.பேதுரு.3:9, 14,15). அவருடைய வருகையில் எடுத்துக்கொள்ளப்படும்படியாக தாமதிக்காமல், உலகத்தை பின்னிட்டு பாராமல் துரிதமாய் ஆயத்தப்படுவோம் . என் மீட்பர் கடைசி நாளில் பூமியின் மேல் நிற்பார். அவரை நான் பார்ப்பேன் . அந்நிய கண்கள் அல்ல , என் கண்களே அவரை காணும்" என்று சொன்ன பக்தன் யோபுவை போல நாமும் நம் நேசரை காண்போம் என்ற நிச்சயத்தோடு ஓடுவோம். ஆமென்.

## CARTOON OF THE MONTH




If you do what is right, will you not be accepted? But if you do not do what is right, sin is crouching at your door; it desires to have you, but you must rule over it. – GENESIS 4:6–7 MSG

# *செயலரிடமிருந்து........*

கிறிஸ்துவுக்குள் என் உடன் விசுவாசிகளே இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில் உங்கள் யாவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்களை கூறிக்கொள்கிறேன். கடந்த ஒரு மாத காலமாக தேவன் கிருபையாய் நம்மோடிருந்து நம்மை ஆசீர்வதித்து வழி நடத்திய தயவுக்காக அவருக்கு நன்றி செலுத்துவோம்.

கடந்த மாதத்தில் நம் திருச்சபையின் எல்லா ஊழியங்களையும் தேவன் அதிகமாக ஆசுர்வதித்து தந்தார் அதற்காக அவரைத் துதிக்கிறேன். குறிப்பாக 06-01-2017 அன்று நடைபெற்ற உடன்படிக்கை ஆராதனை மிகவும் சிறப்பாக அமைய தேவன் கிருபை புரிந்தார். அந்த ஆராதனை அனைவருக்கும் ஆசீர்வாதமாக காணப்பட்டது என்று கர்த்தருக்குள் நம்புகிறேன்.

மேலும் 27-01-2017 அன்று நடைபெற்ற இன்பச்சுற்றுலா மிகவும் ஆசீர்வாதமாக அமைய கர்த்தர் கிருபை செய்தார். அந்த சுற்றுலாவில் அனேகமான திருச்சபையின் அனைத்து உறுப்பினர்களும் உற்சாகத்தோடு கலந்து கொண்டது மிகவும் சந்தோசமான காரியம். பொறுப்பேற்று நடத்திய செயற்குழு அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் என் நன்றிகளை உரித்தாக்குகிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக நம்மை அந்த நாள் முழுவதும் நம் உடனிருந்து சுகபத்திரமாக பாதுகாத்த நம் தேவனுக்கு துதி ஸ்தோத்திரங்களை ஏறெடுப்போம்.

இன்னும் வரும் நாட்களில் நமது சபையின் மூலம் நாம் செய்ய திட்டமிட்டிருக்கும் எல்லா ஊழியங்களையும் நிறைவாக செய்து முடிக்க தேவகிருபையும், இரக்கமும் போதுமானதாக இருக்க ஜெபிப்போம், எல்லா ஊழியங்களிலும் உற்சாகமாக கலந்து கொள்ள முயற்சிப்போம். தேவன்தாமே நம் ஒவ்வொருவருக்கும் அவ்வண்ணமான ஆசீர்வாதத்தினை தந்து வழிநடத்துவாராக.

***M.நேசமணி.***

# SHORT STORY: MAKE TIME TO EAT

Olivia steadied herself on the counter. Why was the world spinning? She shook her head, trying to shake away the blurriness and focus again on the task before her.

It was no use. She couldn’t keep standing. Wearily, she sank into a chair, burying her head in her hands.

She just didn’t get it. A few days ago she had so much energy and felt like she could conquer the world. Now, she felt like a complete failure and could hardly keep standing. What was wrong with her?

Olivia’s sister Sophia came to her side, giving her a gentle side hug. “Oh, Sophy, what’s wrong with me?” Olivia cried, burying her head on her sister’s shoulder.

Sophia listened patiently as Olivia recounted the week’s adventures. “I just feel so tired out,” Olivia explained. “I want to complete the tasks before me well, but I don’t have any energy to do it. I can’t think straight at all.”

“When was the last time you ate?” Sophia’s gentle question was the last one Olivia expected, but one she needed to hear.
When *was* the last time she ate? Come to think of it, her last real

meal was several days ago now. Her only other food had been small, rushed snacks here and there, along with some junk food. "I've had so much to do, I've not really had a good meal in days," Olivia confessed.

Sophia nodded. "That's what I thought. My dear sister, there's no way you can complete what you need to do unless you nourish yourself! And I don't mean just a quick snack here and there. You need a real meal. Your body simply wasn't made to run without good food."

Olivia was surprised that, after a good meal, she could suddenly think clearly again and walk without the world spinning. How different life looked when properly fed! No matter how busy life got, she needed to make time to eat.

"Jesus answered, "It is written: 'Man shall not live on bread alone, but on every word that comes from the mouth of God.' "

*-Diniya Sunshine*

## Wedding Anniversaries in February – 2017

| Date | Name | Mobile No. |
|---|---|---|
| 11.02.2017 | Mr. Justin Oliver<br>Mrs. Sahila Grace | 0563687363 |
| 24.02.2017 | Mr. Ravi Chandran<br>Mrs. Muneeswari | 0566411363 |

# பெபேயாள்

அவள் அநேகருக்கும், எனக்கும் கூட ஆதரவாயிருந்தவள். ரோமர் 16:2

கெங்கிரேயா ஊர் சபைக்கு ஊழியக்காரியாகிய பெபேயாளை பற்றி பவுல் குறிப்பிடுகையில் அவள் அநேகருக்கும், எனக்கும் கூட ஆதரவாயிருந்தவள் என்று அவளைக் குறித்து நல்ல சாட்சி கூறுகிறார். கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே ஊழியத்தில் பங்கெடுக்கிற உங்களுடைய சாட்சி எப்படிப்பட்டதாக இருக்கிறது? நீங்கள் மற்றவர்களுக்கு ஆதரவாக இருக்கிறீர்களா? கர்த்தருடைய ஊழியத்தை அசட்டையாக செய்து ஆவியின் கனிகளை ஒதுக்கி வைத்திருக்கிறீர்களா ? இப்போதே ஆவியின் வரங்களோடு ஆவியின் கனிகளையும் உடையவர்களாகி தேவனுடைய ஊழியத்தைச் செய்வோமாகில் தேவனே உங்களைப் பற்றி சாட்சி கொடுப்பார்.

இந்த கடைசிக் காலத்தில் அநேகர் அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்கின்றனர். அவர்கள் அன்பை காட்ட தவறி விடுகின்றனர். நாம் எவ்வளவு தான் மற்றவர்களுக்குக் கொடுத்தாலும் திருப்தியாகமாட்டார்கள். அவர்களுக்கு நாம் அன்பையும் சேர்த்து வழங்கும்போது அதில் அவர்கள் சந்தோஷபடுவார்கள். நாம் எதையும் அன்பினால் செய்யக் கற்றுக் கொள்ளவேண்டும். கிறிஸ்துவில் பிரியமான உடன் பங்காளர்களே நீங்கள் அன்பினால் எதையும் செய்கிறீர்களா ?

எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம் பண்ணினாலும் என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை. 1 கொரி ந்தியர் 13:3

காட்சியால் விசுவாசமும், பூரிப்பால் நம்பிக்கையும் ஒயும், ஆனால் என்றும் எனக்குள் ஒளிரும் அன்பைத் தாரும்.

கர்த்தாவே, அடியாளுக்குள் எப்போதும் அன்பை ஊற்றிக் கொண்டேயிரும்.
எனபது நமது ஜெபமாக வாஞ்சையாக இருக்கட்டும் ஆமென்.

Mrs.ஜெனிபர் டேவிட்சன்

# Our Indescribable Gift!

"Thanks be to God for his indescribable gift!" – 2 Corinthians 9:15

In 1996, Laura Story joined the Christian band Silers Bald at Columbia International University. For five years she was part of the band and they released four independent albums.

In 2002, Laura began recording her first independent album. She needed just one more song to round out the album. She trusted that the Lord would provide that last song. Soon after, she was driving down a mountain road in North Carolina, "it was a gorgeous day" she remembers and her eyes were fixed on the majesty of her Creator. She broke into worshiping and singing, "Indescribable…uncontainable…You placed the stars in the sky and You know them by name…" Laura added verses on the piano and finished the song while reading God's own description of His power and might in Job Chapter 38. Her first record was now complete.

Soon afterward, Christian artist Chris Tomlin heard the song "Indescribable" and recorded it on his album and soon "Indescribable" was being sung in churches across the world.

Jesus Christ is truly an Indescribable gift to us. Today in prayer, give thanks to God for His Indescribable Gift!

"Indescribable, uncontainable,
You placed the stars in the sky and You know them by name.
You are amazing God
All powerful, untameable,
Awestruck we fall to our knees as we humbly proclaim

You are amazing God" – Laura Story

God's Word: "I will praise God's name in song and glorify him with thanksgiving." – Psalm 69:30

Collected by.
**Mrs.Ceciliya Rajkumar**

# Birthday Celebrants in February – 2017

| Date | Name | Mobile No. |
|---|---|---|
| 03.02.2017 | Mrs. Stella Jothi | 0502654960 |
| 10.02.2017 | Mrs. Beula Rani John | 0505431241 |
| 13.02.2017 | Mr. Jensin Bose | 0502334421 |
| 14.02.2017 | Baby. Jainy John Joseph | 0502455266 |
| 17.02.2017 | Mr.Sunith Samuel | 0565473326 |
| 22.02.2017 | Mrs.Jeyantha Belfer | 0557309275 |
| 24.02.2017 | Ms.Sherin Carol | 0505736697 |
| 25.02.2017 | Mr. Giftus Marvin | 0505237237 |
| 25.02.2017 | Ms. Mukila Ravichandran | 0566411363 |

| Ash Wednesday Service | | |
|---|---|---|
| 01.03.2017 | 7.00pm | Evangelical church centre<br>Oasis campus |

-

*சிந்தனைக்கு………*

## எலிசாவை பின்பற்றின கேயாசி

**"தேவனுடைய மனுஷனாகிய எலிசாவின வேலைக்காரன் கேயாசி என்பவன், அந்த சீரியனாகிய நாகமான் கையிலே ஏதாகிலும் வாங்குவேன் என்று நாகமானை பின்தொடர்ந்தான்."**

**(2 இராஜா: 5:20,21)**

எலியாவோடு இருந்த எலிசா, இரண்டு மடங்கு ஆவியின் வரங்களைப் பெற்றுக்கொண்டார். அப்படியானால் எலிசாவோடுகூட இருந்த கேயாசி, எலியாவின் வரங்களைப்போல நான்கு மடங்கு ஆவியின் வரங்களைப் பெற்றிருக்கலாம். ஆனால் கேயாசியோ வரங்களைப் பெற்றுக் கொள்ளாமல் போனது மட்டுமல்லாமல் எலிசாவிடமிருந்தும், கர்த்தரிடமிருந்தும் தீராத சாபங்களைப் பெற்றுக்கொண்டார். கேயாசிமேலும், அவனுடைய சந்ததிமேலும், என்றென்றுமாக குஷ்டரோகம் வந்தது.

ஒருவரோடு கூட இருப்பதின் மூலமாகவோ அல்லது அவருக்கு சேவை செய்வதினாலேயோ ஆவியின் வரங்கள் வருவதில்லை. ஆவியின் வரங்களைப் பெறுவதற்கு கர்த்தரோடும் அவரது ஊழியங்களோடும் இணைந்து இருக்கவேண்டியதும், உண்மையும் உத்தமுமாய் வாழ்க்கையை காத்துக் கொள்ளவேண்டுவதும் அதிக நிச்சயம்.

எலிசாவோடு இருந்த கேயாசியும், இயேசுவோடு இருந்த யூதாஸ்காரியோத்தும் பொருளாசையினால் நிரம்பியிருந்தார்கள். குஷ்டரோகத்திலிருந்து நாகமான் குணமானதையும், நாகமானிடத்திலிருந்து எந்த காணிக்கையையும் வாங்காமல் எலிசா அனுப்பிவிட்டதையும் அறிந்த கேயாசி, தனக்கு ஏதாவது வெகுமதி கிடைக்கும் என்று விரும்பி, நாகமான் சென்ற இரதத்தை பின்தொடர்ந்து ஓடினான். அப்படியேதான் யூதாஸ்காரியோத்தும்கூட பிரதான ஆசாரியனோடு முப்பது வெள்ளிக்காசுகளுக்காக இயேசுவை விலைபேசினான். கூர்ந்துகவனிப்போமானால் இருவரின் உள்ளங்களும் தங்கள் எஜமானரை உண்மையும் உத்தமுமாய் பின்பற்றவில்லை. அவர்களுடைய சரீரம் தங்கள் எஜமானரோடு இருந்தபோதிலும் உள்ளமோ அவர்கட்கு தூரமாய் இருந்தது. உதட்டளவில் கனம்பண்ணினார்களே தவிர அவர்கள் உள்ளமோ வேறுபட்டிருந்தது.

அருமையானவர்களே ஒருபோதும் நாம் உலகத்தின் காரியங்கட்கு நமது உள்ளத்தை திருப்பாமல் தேவனையே சார்ந்திருப்போம். நமது அனுதினத் தேவையை நம்முடைய பரமபிதா அறிந்திருக்கிறார் அவரின் சித்தத்தின்படி நம்மை வழிநடத்துவார் என்பது அதிக நிச்சயமல்லவா.

**கிறிஸ்து சொன்னார் "ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப் பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை,அறுக்கிறதுமில்லை,கழஞ்சியங்களில் சேர்த்துவைக்கிறதுமில்லை; அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார்; அவைகளைப்பார்க்கிலும் நீங்கள் விஷேசித்தவர்கள் அல்லவா?"(மத்தேயு.6:26).**

M. Nesamony

## WORSHIP TIMINGS – FEBRUARY - 2017
## MAIN WORSHIP HALL, OASIS HOSPITAL COMPOUND, AL AIN.

| | | |
|---|---|---|
| 1st & 3rd FRIDAYS | 7.00 pm | *COMMUNION SERVICE* |
| 2nd & 4th FRIDAYS | 7.00 pm | *EVENING SERVICE* |
| 2nd & 4th FRIDAYS | 6.30 pm | *BIBLE STUDY* |
| EVERY FRIDAYS | 6.30 pm | *JUNIOR CHURCH* |

## PARSONAGE, AL MUWAIJI


| | | |
|---|---|---|
| 03.02.2017 FRIDAY | 11.30 am | *FASTING PRAYER* |
| 11.02.2017 SATURDAY | 07.30 pm | *WOMEN'S PRAYER CELL* |
| 18.02.2017 SATURDAY | 07.00 pm | *MEN'S PRAYER & CAMP MINISTRY* |
| 28.02.2017 TUESDAY | 11.30 pm | *MONTH END PRAYER* |

# YOUTH- CROSSWORD PUZZLES

## Birthright

ACROSS
1. The Bible says, Esau ______his birthright.
2. Jacob's occupation was a _______.
3. Esau traded his birthright for a bowl of _____.
4. Esau did not value his _________.
5. Esau's inheritance included ________.
6. Compared to Jacob, Esau was very _______.
7. Esau was a mighty ________.
8. What was the name of Jacob and Esau's father?

DOWN
1. Jacob's twin brother was _______.
2. Esau's inheritance included __ __.
3. Esau was the ______brother.
4. In addition to items, Esau was to inherit his father's _________.
5. Who tricked Esau into selling his birthright for a bowl of stew.
6. Esau thought he was going to die from ________.
7. Esau's face and arms were _____.



**<u>Congrats who have done all</u>**

*D.P. Joseph Jovin*

# *வேத வினா விடைப் போட்டி – 27 ( பிப்ரவரி)*

## ( 1.இராஜாக்கள்.1-11 அதி.)

1. தாவீதுக்கு சகலநாளும் சிநேகிதனாயிருந்த ராஜா யார்?
2. விடுகதைகளினால் சாலமோனைச் சோதித்தவள் யார்?
3. தன்னைத்தானே உயர்த்தி நான் ராஜா ஆவேன் என்றது யார்?
4. பலிபீடத்தின்மேல் சாலமோன் எத்தனை தகனபலிகளைச் செலுத்தினான்?
5. பராக்கிரமசாலி, காரியசமர்த்தனான வாலிபன் யார்?
6. பண்டிகையை எத்தனை நாள் ஆசரித்தார்கள்?
7. பலிபீடத்தண்டையில் செத்துப்போனவன் யார்?
8. ஆலயத்தின் சந்நிதி ஸ்தானம் எத்தனை நீளம், அகலம், உயரமுமாயிருந்தது?
9. தலைமை விசாரிப்புக்காரர்கள் எத்தனைபேர்?
10. சாலமோன் எத்தனை நீதிமொழிகளையும், பாட்டுக்களையும் சொன்னான்?

***குறிப்பு* :** விடைகளுக்குரிய அதிகாரமும் வசனமும் குறிப்பிட்டு இந்த பிப்ரவரி மாதம் 20—ஆம் தேதிக்கு முன் ஆயருக்கு அனுப்பி வைக்கவும்.

## ஜனவரி **மாத விடைகள்**

1. 2சாமுவேல்.21:10
2. 2சாமுவேல்.17:18
3. 2சாமுவேல்.14:28
4. 2சாமுவேல்.19:5
5. 2சாமுவேல்.15:21
6. 2சாமுவேல்.18:5
7. 2சாமுவேல்.16:6,7
8. 2சாமுவேல்.23:8
9. 2சாமுவேல்.14:30
10. 2சாமுவேல்.20:19

ஜனவரி (2017) மாத வேத வினா விடைப் போட்டியில் சரியான விடைகள் எழுதியவர்கள்

1. திருமதி. பிப்லின் நெல்சன்
2. திருமதி. ஜோனிஷ் ஹெர்சில்
3. திருமதி. ஹெலன் கம்பீரம்
4. திருமதி. பிரேமா ரூத் பிரேம்
5. திருமதி. ரூபா எசேக்கியேல்
6. திருமதி. ஜெயின் ராஜவேல்
7. திருமதி. ஜெயந்தா பெல்வா்
8. திருமதி. ஷீபா பிரகாஷ்
9. திருமதி. அகஸ்டா லாரன்ஸ்

## கோதுமை மணி

### மிஷனரி ஜேம்ஸ் சால்மர்ஸ் (1841 – 1901)

**கிறிஸ்துவிடம் நெருக்கி வரும் போதெல்லாம் ஆண்டவரை அறியாத மக்களைக் குறித்த வாஞ்சையே என்னை ஆட்கொள்ளுகிறது என்று கூறிய ஜேம்ஸ் சால்மர்ஸ்,நாகரீகமற்ற, மனித மாமிசம் உண்ணும் கொடூர பழங்குடிகள் நிறைந்த பசிபிக் கடலில் உள்ள நியு கினியா தீவிற்கு மிஷனரியாக சென்று துணிவுடன் நற்செய்தியை இறுதியில் பழங்குடி மக்களுக்கு உணவானார். இன்றைக்கு அந்த தீவில் உள்ள மக்களில் 96 சதவீதம் கிறிஸ்தவர்களாக உள்ளனர். ஒரு காலத்தில் மனித மாமிசம் சாப்பிட்டவர்கள் இன்றைக்கு ஆவியோடும் உண்மையோடும் இயேசுவை ஆராதித்து வருகின்றார்கள். இதற்காக தந்து உயிரை தியாகம் செய்த மிஷனரி ஜேம்ஸ் சால்மர்ஸ் (James Chalmers) என்பவரது வாழ்க்கை வரலாறை இந்த காட்டுரையில் காண்போம்.**

**மனித மாமிசம் உண்பவர்கள்:**

**நைஜீரியாவில் மனித மாமிசத்தை விற்பனை செய்ததாக உணவு விடுதி உரிமையாளர் உள்பட 11 பேர் கைது**

செய்யப்பட்டுள்ளனர்.சிரியாவில் அதிபர் பஷீர் அல் ஆசாத் ஆட்சிக்கு எதிராகசிரிய விடுதலைப் படைபோர் செய்த போது,விடுதலைப் படையிடம் பிடிபட்ட சிரிய இராணுவச் சிப்பாய் ஒருவரின் இதயத்தை வெட்டியெடுத்து, போராளி ஒருவர் உண்ற சம்பவம் நடந்தேறியது. அவரது உடலத்தின் மார்பை பிளந்து அவரது இதயத்தை வெளியே எடுக்கும், ஆசாத் படையினருக்கு எதிராகப் போராடிவரும் பரூக் படை என்னும் போராளிகள் குழுவின் தலைவரான அபு சக்கார் என்பவர், 'பஷீர் நாயின் கைக்கூலிகளான இராணுவமே ..உங்கள் இதயம் மற்றும் ஈரல்களை தின்று விடுவோம் என்று இறைவன் மீது ஆணையிடுகிறோம்' என்று பலமாகக் கூறியபடி அதனை உண்றார். இது போன்ற நிகழ்ச்சிகள் இன்றைக்கும் நாம் வாழும் உலகத்தில் நடக்கின்றன என்றால் அதை மறுக்க முடியாது. இவர்கள் நாகரீகம் அறிந்தும், தீய சக்திகளின் பிடியாலும்,குருட்டு மதங்களை பின்பற்றுவதாலும் இது போன்ற செயல்களில் ஈடுபடுகிறார்கள்.

இருபதாம் நூற்றாண்டுக்கு முந்தைய நாகரீகம் வளர்ந்திராத நாட்களில், தீவுகளில் வசிக்கும் பழங்குடி மக்களிடமும் மனித மாமிசத்தை உண்ணும பழக்கம் அதிகளவில் காணப்பட்டது. தற்போது அப்படிப்பட்ட தீவுகளில் வாழ்கின்ற மக்கள்,நம்மைப்போல மிகுந்த நாகரீகத்துடன் வாழ்கின்றார்கள். ஒரு காலத்தில் யார் அந்த தீவிற்கு சென்றாலும் நரபலியாகிவிடுவார்கள். ஆனால் இன்றைக்கோ அந்த தீவுகள் எல்லாம், அநேகர் செல்லக்கூடிய சுற்றுலா தளங்களாக மாறிவிட்டது. இந்த மாற்றத்திற்கு யார் காரணம்? மரணமே ஆனாலும் பரவாயில்லை. கிறிஸ்துவின் அன்பை அவர்களுக்கு அறிவித்தே தீருவோம் என்று, தங்கள் உயிரை பணயம் வைத்து அந்த மக்களிடமாய் கிறிஸ்துவின் அன்பை எடுத்து சென்ற மிஷனரிகளே.

## ஜேம்ஸ் சால்மர்ஸ்-ன் இளமைப் பருவம்:

1841 ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 4 ம் தேதி "ஜேம்ஸ் சால்மர்ஸ்"ஸ்காட்லாந்து தேசத்தில் கல்சிற்ப ஆசாரியின் மகனாக

பிறந்தார். 18 வயதில் தனது ஊரில் நடைபெற்ற எழுப்புதல் கூட்டத்தில் இரட்சிக்கப்பட்டு இயேசுவின் அன்பை அறிந்து, தமது வாழ்க்கையை மிஷனரியாக அற்பணித்தார். பட்ட படிப்புகளை முடித்தவுடன் தமது 26ம் வயதில் லண்டன மிஷனரி சங்கத்தில் இணைந்தார்.

## "ரரோடோங்கா" தீவில் கிறிஸ்துவின் பணி:

1867ம் வருடம்மே மாதம் "ரரோடோங்கா" (Rarotonga) என்ற தீவிற்கு மிஷனரியாக வந்திறங்கினார் ஜேம்ஸ் சால்மர்ஸ்.கிறிஸ்துவை அறியாத "ரரோடோங்கா" தீவில் வாழ்ந்த பழங்குடி மக்களின் மொழியை வெகு விரைவில் கற்று,அந்த மொழியிலே கிறிஸ்த்துவின் அன்பை அவர்களுக்கு அறிவித்தார். அந்த தீவில் பத்து வருடம் மிஷனரி பணி செய்து இருளின் ஆதிக்கத்தில் இருந்த மக்களை மெய்யான ஒளியாகிய இயேசுவினிடத்தில் சேர்த்தார்.

## தீவு நாடான நியு கினியா-வில் கிறிஸ்துவின் பணி:

1877 ம் வருடம்தமது 36ம் வயதில் ஆஸ்திரேலியாவுக்கு மேல் வடபகுதியில் அமைந்திருக்கும் தீவு நாடான "நியு கினியா"விற்கு(New Guinea) தனது மனைவியோடு சென்றார் ஜேம்ஸ் சால்மர்ஸ். அந்த தீவுகளில் வசித்த மக்கள் மனித மாமிசம் உண்பவர்களாக இருந்தனர். ஆபத்து மிகுந்த அந்த மக்களுக்கு சுவிசேஷம் சொல்ல போகையில் தமது கையில் எந்த விதமான ஆயுதங்களையும் எடுத்து செல்ல மாட்டார். ஏனென்றால் கையில் ஆயுதங்களோடு சென்றால் வெள்ளை மனிதன் நம்மை தாக்க வந்திருக்கிறான் என்று சொல்லி ஓடுவார்கள். இல்லையென்றால் தாக்க தொடங்குவார்கள். ஆபத்து நிறைந்த பழங்குடி மக்களின் மேல் கரிசனை கொண்டவராய் கிறிஸ்துவின் அன்பை அநேகருக்கு அறிவித்தார். 105 க்கும் அதிகமான கிராம தீவுகளுக்கு சென்று கிறிஸ்துவின் அறிவித்தார். 90 கிராம தீவுகளில் முதலாவது சென்ற வெள்ளை மனிதனும் இவரே. இயேசுவின் அன்பை எடுத்து சென்றவரும் இவரே ஆவார்.

**பழங்குடி மக்களுக்கு உணவாகுதல்:**


1901 ம் வருடம் ஏப்ரல் 8 ம் தேதி ஈஸ்டர் ஞாயிறாக இருந்தது. முந்தைய நாளில் “கோரிபாரி” (Goaribari Island) என்ற தீவிற்கு படகில் சென்றிருந்த ஜேம்ஸ் சால்மர்சை அத்தீவின் பழங்குடி மக்கள் சூழ்ந்து கொள்ளவே, படகை விட்டு அவர் இறங்காமல் நாளை வருவதாக கூறி தனது பகுதிக்கு வந்தார். அடுத்த நாள் ஈஸ்டர் ஞாயிறு ஆராதனைகளை முடித்து விட்டு, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நற்செய்தியை அறிவிக்க ஆபத்து நிறைந்த“கோரிபாரி” தீவிற்கு மீண்டும் சென்றார். ஒலிவர் டோம்கின்ஸ் (Oliver Tomkins) என்ற மிஷனரியும் உடன் சென்றார். இவர்களது வருகையால் மிகவும் மகிழ்ந்த அத்தீவின் பழங்குடி மக்கள் இருவரையும் உற்சாக வரவேற்புடன், புதிதாய் அமைக்கப்பட்ட“தூபு” (Dubu) என்று அழைக்கப்படும் கேளிக்கை குடிசைக்கு அழைத்து சென்றனர். அந்த இடத்தில் மனிதர்களை சாகும் வரை சண்டையிட வைத்து பின்னர் அவர்களை பலியாக்கி உணவாக உண்பார்கள். இதை அறிந்திராத ஜேம்ஸ் சால்மர்சும், ஒலிவர் டோம்கின்சும் கிறிஸ்துவின் அன்பை அவர்களுக்கு அறிவித்தவன்னமாய் “தூபு” என்ற குடிசைக்கு சென்றனர். மரத்தினால் ஆன விக்ரகங்களை சுற்றிலும் அநேக மனித மண்டை ஓடுகள் குவிக்கபட்டிருந்தது. இருவரும் அதை பார்த்துக் கொண்டிருந்த வேளையிலே, எந்தவித எச்சரிப்பும் இன்றி அந்த பழங்குடி மக்கள் அவர்களை தாக்க தொடங்கினர். சில நிமிடங்களில் அவர்களது உடல் துண்டு துண்டாக வெட்டப்பட்டு, அருகில் கொதித்து கொண்டிருந்த குழம்பில் போடப்பட்டது. ஜேம்ஸ் சால்மர்சும், ஒலிவர் டோம்கின்சும்,இயேசு உயிர்த்தெழுந்த அந்த ஈஸ்டர் நாளில், இயேசுவை அறிவித்துக்கொண்டே அந்த பழங்குடி மக்களுக்கு உணவாக மாறினர்.

ஜேம்ஸ் சால்மர்ஸ் மற்றும் ஒலிவர் டோம்கின்சின் உடல்கள் விதையாகவும், அந்த மக்களுக்கு உணவாகவும் மாறியதை அறிந்து அநேக மிஷனரிகள் “நியு கினியா” தீவை நோக்கி சென்று

இயேசுவின் அன்பை அறிவித்தனர். அநேக மக்கள் கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டனர். அதன் விளைவு, 7 கோடிக்கும் அதிமான மக்கள் வாழும் அந்த தீவுல், இன்றைக்கு 96% கிறிஸ்தவர்களாக மாறியுள்ளனர்."கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியா விட்டால் அது அப்படியே இருக்கும் .அது மடிந்தால்தான்,மிகுந்தவிளைச்சலை அளிக்கும் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்." (யோவான் நற்செய்தி 12: 24)

மிக எளிதான ஓர் உவமை, மிக ஆழமான உண்மைகளைக் கூறும் உவமை .கோதுமை மணி படைக்கப்பட்டதற்கு முக்கியமான இரண்டு காரணங்கள் உண்டு .ஒன்று, அது உணவாக மாறி, வேறொரு உயிரை வளர்க்க வேண்டும் .முதலாவதாக நாம் கிறிஸ்துவுக்காய் வாழ்ந்து சாதித்து அநேகருடைய வாழ்வில் கிறிஸ்துவை வளர்க்க வேண்டும். முடிவிலே அது விதையாக மாறி, தன் இனத்தைப் பெருக்க வேண்டும்.இந்த இரண்டு காரணங்களும் நிறைவேற, கோதுமை மணி தன் சுய உருவை, உயிரை இழக்க வேண்டும் .அதாவது கிறிஸ்துவுக்காய் நாம் உருமாறி பின்னர் விதையாய் மாறவேண்டும். இதற்கு மாறாக, கோதுமை மணியை நாம் அலங்காரப் பொருளாகவும் பயன்படுத்தலாம்.ஆனால்,அலங்காரப் பொருளாக இருப்பது கோதுமை மணியின் இயல்பும் அல்ல. அதினால் மற்றவர்களுக்கு எந்த பயனும் அல்ல.நீங்களும் நானும் கிறிஸ்துவைப் போல உருமாறி அவருக்காய் வாழ்ந்து சாதிக்க அழைக்கபட்டுள்ளோம். விதையாய் மண்ணில் வீழ்ந்து மிகுந்த விளைச்சலை கொடுக்கும் படியாகவும் அழைக்கபட்டுள்ளோம்.

எங்களை நேசித்து வழிநடத்தும் தெய்வமே, இயேசுவே, ஜேம்ஸ் சால்மர்ஸ் போன்று துணிவுடன் உமக்காய் ஊழியம் செய்வேன். கிறிஸ்துவை அறியாத ஜனங்களுக்கு கிறிஸ்துவின் அன்பை அறிவிப்பேன். இயேசுவின் மூலமாய் ஜெபிகின்றேன் பிதாவே. ஆமேன்.




Dear Children, please find these words and circle them, cut this puzzle and hand over to Pastor Uncle on or before 20th February2017.

## Congrats you have done all

1) Eastrine
2) Angelin Sophia Nelson
3) Shelbino
4) Diniya Sunshine
5) Dennis Roger
6) Mercy
7) Annlin Sophia Nelson
8) Joshua
9) Joshika Varshini
10) Jesvin
11) Merwin Samuel
12) Roshan
13) Kevin
14) Gain

# Daily Bible Reading February – 2017

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். (சங். 1 : 2)

| Date | Day | Morning | | Evening | |
|---|---|---|---|---|---|
| 1 | Wed | Deuteron.16 | உபாகமம்.16 | James.5 | யாக்கோபு.5 |
| 2 | Thu | Deuteron.17 | உபாகமம்.17 | 1Peter.1 | 1பேதுரு.1 |
| 3 | Fri | Deuteron.18 | உபாகமம்.18 | 1Peter.2 | 1பேதுரு.2 |
| 4 | Sat | Deuteron.19 | உபாகமம்.19 | 1Peter.3 | 1பேதுரு.3 |
| 5 | Sun | Deuteron.20 | உபாகமம்.20 | 1Peter.4 | 1பேதுரு.4 |
| 6 | Mon | Deuteron.21 | உபாகமம்.21 | 1Peter.5 | 1பேதுரு.5 |
| 7 | Tue | Deuteron.22 | உபாகமம்.22 | 2Peter.1 | 2பேதுரு.1 |
| 8 | Wed | Deuteron.23 | உபாகமம்.23 | 2Peter.2 | 2பேதுரு.2 |
| 9 | Thu | Deuteron.24 | உபாகமம்.24 | 2Peter.3 | 2பேதுரு.3 |
| 10 | Fri | Deuteron.25 | உபாகமம்.25 | 1John.1 | 1யோவான்.1 |
| 11 | Sat | Deuteron.26 | உபாகமம்.26 | 1John.2 | 1யோவான்.2 |
| 12 | Sun | Deuteron.27 | உபாகமம்.27 | 1John.3 | 1யோவான்.3 |
| 13 | Mon | Deuteron.28 | உபாகமம்.28 | 1John.4 | 1யோவான்.4 |
| 14 | Tue | Deuteron.29 | உபாகமம்.29 | 1John.5 | 1யோவான்.5 |
| 15 | Wed | Deuteron.30 | உபாகமம்.30 | 2.John | 2.யோவான் |
| 16 | Thu | Deuteron.31 | உபாகமம்.31 | 3.John | 3.யோவான் |
| 17 | Fri | Deuteron.32 | உபாகமம்.32 | Judea | யூதா |
| 18 | Sat | Deuteron.33 | உபாகமம்.33 | Revelation.1 | வெளி.விசே.1 |
| 19 | Sun | Deuteron.34 | உபாகமம்.34 | Revelation.2 | வெளி.விசே.2 |
| 20 | Mon | Joshua.1 | யோசுவா.1 | Revelation.3 | வெளி.விசே.3 |
| 21 | Tue | Joshua.2 | யோசுவா.2 | Revelation.4 | வெளி.விசே.4 |
| 22 | Wed | Joshua.3 | யோசுவா.3 | Revelation.5 | வெளி.விசே.5 |
| 23 | Thu | Joshua.4 | யோசுவா.4 | Revelation.6 | வெளி.விசே.6 |
| 24 | Fri | Joshua.5 | யோசுவா.5 | Revelation.7 | வெளி.விசே.7 |
| 25 | Sat | Joshua.6 | யோசுவா.6 | Revelation.8 | வெளி.விசே.8 |
| 26 | Sun | Joshua.7 | யோசுவா.7 | Revelation.9 | வெளி.விசே.9 |
| 27 | Mon | Joshua.8 | யோசுவா.8 | Revelation.10 | வெளி.விசே.10 |
| 28 | Tue | Joshua.9 | யோசுவா.9 | Revelation.11 | வெளி.விசே.11 |

# Coloring Page for Kids

*1.Samuel.1 - Hannah's Prayer*



**Congrats who have done all**

*1)Jayne 2) Erline Berniceraj 3) Eric Jayden 4)Jonathan*
*5)Geovin 6)Jeremiah*
*6)Ridhun 7) Jemima 8) Johan Sanjo 9) Angelin steffina*

| அருளுரை தலைப்புகள் - பிப்ரவரி 2017 | | | | | |
|---|---|---|---|---|---|
| **நாள்** | **தலைப்பு** | **ப. ஏற்பாடு** | **நிருபம்** | **நற்செய்தி** | **சங்கீதம்** |
| 03.02.2017 | கிறிஸ்து வாழ்வின் இசை நயம் | யாத்.15:1~21 | எபே.5:15~121 | லூக்.8:26~39 | 149 |
| 10.02.2017 | ஓய்வுநாள் படைப்புகளின் சிகரம் | ஏசா.65:17~25 | எபி.4:2~13 | மாற்.2:23~28 | 8 |
| 17.02.2017 | வீழ்ச்சி படைப்புகளின் நோக்கத்தை பாழாக்கியது | ஆதி.6:1~13 | ரோமர்.7:4~25 | மத்.7:15~23 | 32 |
| 24.02.2017 | தபசுகாலம் மறுரூபமாக்கப்படுதலின் காலம் | ஏசா.44:21-28 | ரோமர்.11:13~24 | யோவா.2:1~11 | 6 |

## ஆராதனை பாடல்கள் - பிப்ரவரி 2017

**3-2-2017**

பா: 12 – பூலோகத்தாரே
பு: 54 – ஜீவனுள்ள தேவனே
கீா்: 27 – சருவ லோகாதிபா
கீா்: 68 – மகனே உன் நெஞ்செனக்குத்
பா: 87 – விருந்தைச் சேருமேன்
பா: 71 – தூய பந்தி

**10-2-2017**

பா: 1 – அநாதியான கா்த்தரே
பு: 105 – உன்னதமானவரின்
கீா்: 65 – காலத்தின் அருமையை
கீா்: 79 – ஆதாரம் நீதான் ஐயா
பா: 66 – பாவ சஞ்சலத்தை நீக்க

**17-2-2017**

பா: 14 – போற்றும் போற்றும்
பு: 116 – கிறிஸ்துவின் அடைக்கலத்தில்
கீா்: 44 - இயேசுவின் நாமமே
கீா்: 66 – குணப்படு பாவி
பா: பிதாவே எங்களைக் கல்வாரியில்
பா: 306 - தூய்மை பெற நாடு

**24-2-2017**

பா: 5 – உம்மை துதிக்கிறோம்
பு : 18 – அல்லேலூயா கா்த்தரையே
கீா்: 59 – ஆவியை மழைபோலே
கீா்: 82 – என் மீட்பா் உயிரோடிருக்கையிலே
பா: 302 – என்தன் ஜீவன்

# CSI Tamil Parish Al Ain

## BIBLE EXAM (07-04-2017) Friday

| வகுப்பு | வேதாகம பகுதிகள் | | தேர்வுமுறை |
|---|---|---|---|
| KG1 & KG2 | சங்கீதம் - 133, பரமண்டல ஜெபம் | | மனப்பாடமாக சொல்ல வேண்டும் |
| I & II | சங்கீதம் -1, வேதாகம புத்தக வரிசை | | |
| III & IV | சங்கீதம் - 34, பத்து கற்பனைகள் | | |
| | **பகுதி - 1** | **பகுதி - 2** | **பகுதி – 1**<br>மனப்பாடமாக எழுத வேண்டும்<br>**பகுதி - 2**<br>சரியான விடையைத் தெரிந்தெடுத்து எழுதவும் |
| V & VI | யோவான்.6:35-38,48-51<br>பாவ அறிக்கை ஜெபம் | யோவான் 1-10 | |
| VII & VIII | யோவான்.15:1-8,<br>அப்போஸ்தலர் விசுவாசப் பிரமாணம் | யோவான் 1-15 | |
| IX & X | யோவான்.10:1-10<br>நிசேயா விசுவாசப்பிரமாணம் | யோவான் 1-18 | |
| XI & XII | யோவான்.10:14-29, | யோவான் 1-21 | |
| Youth (18-35) | ரோமர் | | எழுத்துத் தேர்வு |
| Adult (35-Above) | 1கொரிந்தியர் | | |